1990 ஏப்ரல் 5]

9-45 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விடையின் அடிப் படையில் தொடர் வினா அமைய வேண்டும். மற்றொரு முறை பெரியார் பேருரையைக் கேட்போம். (சிரிப்பு)

திரு. வே. பெரியசாமி: அந்த விவசாயிகள் வாங்கிய கடன்களைக்கூட கட்ட முடியாத துர்ப்பாக்கியமான சூழ் நிலைக்கு உந்தப்பட்டு இருக்கிற காரணத்தால் அவர்களுக்கு அரசாங்கம் குறைந்த செலவில் ஆழ்துளைக் கிணறுகளை அமைக்கின்ற நேரத்தில் அதில் தண்ணீர் இல்லை என்று சொன்னால் அவர்கள் அந்த கிணறுகள் அமைக்கப்படுவதற்கு ஆன செலவுகளை எல்லாம் ரத்து செய்தும், மீதி உள்ள கிணறை குறைந்த தொகையில் போட்டுக் கொடுப்பதற்கு இந்த அரசு விரைவில் முயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைப் பொறி யியல் துறை மூலம் குறைந்த வாடகையில் துளைக் கருவி போர் வெல் போட வழங்கப்படுகிறது என்று தான் பதில் சொன்னேன். மலைவாசி, ஆதி திராவிடர்களுக்கு 50 சதவீதம் மானியத் தொகையும் வழங்கப்படுகிறது. இதற்கு மேல் விளக்கம் தேவையில்லை என்று கருதுகிறேன்.

ஆத்தூர் ஆதி திராவிட மாணவ, மாணவியர் விடுதிகளை விரிவாக்குதல்.

* 3121 திரு. எஸ். குணசேகரன் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆத்தூர் ஆதி திராவிட மாணவ, மாணவியர் விடுதி களை விரிவாக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

ஆத்தூர் ஆதி திராவிட மாணவர் விடுதியில் மாணவர் களின் எண்ணிக்கையை 90-லிருந்து 105 ஆக உயர்த்தும் செயற் குறிப்பு மட்டும் அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். குணசேகரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆத்தூர் தாலுகாவின் மையப் பகுதியாகும். தற்போது அங்குள்ள விடுதிகளில் மாணவர்களுக்குப் போதிய வசதி இல்லை. மாணவர்களின் எண்ணிக்கையையும் அதிகப்படுத்தி கூடுதல் கட்டிடம் கட்டித் தருவதற்கு இனி மேலாவது அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று வரும் நிதி ஆண்டில் அரசு விடுதி அமைக்க அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

குறிச்சி ஆதி திராவிட நல மாணவர் விடுதிக்குச் சொந்தக் கட்டிடம்.

* 3432 திரு. கோ. வீரையன் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நாகை வட்டம், குறிச்சியில் உள்ள ஆதி திராவிட நல மாணவர் விடுதிக்குச் சொந்தக் கட்டிடம் கட்டும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) முக்கியத்துவம், அவசியம் மற்றும் நிதி ஒதுக்கீடு வசதியைப் பொறுத்து அரசு நடவடிக்கை எடுத்து பணியை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியத்துவம் கருதி பணி மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கிராமப் புறத்தில் இருக்கக் கூடிய ஆதி திராவிட மாணவர் விடுதிக்கு மற்றவர்களிடமிருந்து வாடகைக் கட்டிட வீடுகள் கிடைப்பது என்பது எந்த அளவுக்குச் சாத்தியமற்றது என்பது அரசுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். எனவே அப்படி அந்தக் கிராமப்புறத்தில் இருக்கக் கூடிய மாணவர் விடுதி இப்போது தனியார் கட்டிடத்தில் இருப்பதனால் பெரும்